# போலீஸ் பார்வை
## POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-11 • Volume-11 • இதழ்-7 • Issue-7 • மே-2026 • May -2026 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV

E_Book: www.policeparvai.com




அகில இந்திய காவல் திறனாய்வு போட்டியில் வென்றவர்களுக்கு

## மதுரை SP திரு.அர்விந்த் IPS அவர்கள் பாராட்டு



+2 ரிசல்ட்

மாணவி

## ரிக்சிதா

## 598/600

## மாமூல் வாங்குபவர்கள் பிச்சை எடுத்து சாப்பிடலாம்

கடலூர் மாவட்ட SP ஜெயகுமார் IPS






## நவபாஷன சிலைகள் எங்கெல்லாம் இருக்கிறது?



# மக்கள் ஆதரவை தக்க வைப்பாரா முதல்வர் விஜய்

மரணத்தை வென்ற கமாண்டன்ட் சேதன் சீட்டா



www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...



இந்த 3 ராசியினரின் வாழ்க்கையே மாறப்போகுது...




# உடலில் ஏற்படக்கூடிய அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வளிக்கும் வேதிப்பொருட்கள் இல்லாத 100 சதவீத இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட துணை உணவுகள்.

**EMPIRE**
together to grow!

இந்த பரபரப்பான நவீன உலகத்தில் கெமிக்கல் நிறைந்த உணவுகள், சத்து இல்லா உணவுகள், மரபணு மாற்றம் செய்யப்பட்ட விவசாயத்தால் விளைந்த பொருட்கள் முதலியவற்றால் மனிதனுக்கு ஊட்டச்சத்து குறைபாடு இருப்பதும் அதற்காக துணை உணவுகளை நாம் அன்றாடம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் உலகம் அறிந்த உண்மை. ஆகவே நாங்கள் அதுபோன்ற நல்ல, மக்களுக்கு தேவையான எளிதில் கிடைக்காத இயற்கை பொருட்களை அறிமுகப்படுத்த களம் இறங்கியுள்ளோம்,

மூலிகை மற்றும் வேதிப்பொருட்கள் இல்லா துணை உணவுப்பொருட்கள் (HERBAL FOOD SUPPLEMENTARY & HEALTH CARE PRODUCTS). வேதிப்பொருட்கள் இல்லா கலப்படமற்ற உணவுப் பொருட்கள் (FOOD PRODUCTS), வீரியமான வேதிப்பொருட்கள் பயன்படுத்தபடாத மூலிகை அதிகம் அல்லது முழுவதும் சேர்க்கப்பட்ட சொந்த பயன்பாட்டு பெருட்கள் (PERSONAL CARE), அழகுசாதன (BEAUTY CARE) பொருட்கள் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் (HOME CARE), சுற்றுசுழலை பாதிக்காத (ECO FRIENDLY) கைவினை பொருட்கள் (HAND CRAFT) போன்ற மனிதனுக்கும் மண்ணுக்கும் தீங்கு விளைவிக்காத பொருட்களை மட்டுமே எம்பயர் மார்க்கெட்டிங் செய்கிறது என்பதனை உறுதியுடனும் பெருமிதத்துடனும் தெரிவித்துகொள்கிறேன்.

Nr. **B.BHARATHIRAJ** MCA.,
Managing Director, EMPIRE



## உங்கள் இல்லத்திலிருந்தே எங்களது தயாரிப்புகளை பெறலாம்.

**97 89 49 1438 | 766 755 1542**

# போலீஸ் பார்வை

**மே 2026 மலர் 11 இதழ் 7**

**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.**M.பாலகிருஷ்ணன் சுவாமி**

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், U.மதனகோபால், K.மனோஹரன், K.K.ஞானேஸ்வரன்

International Legal advisor : **Ramachandran Saravanan B.A.,LLB., D.L.L..,LLM**

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், K.பாபு I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன், J.ஜெயவேல்முருகன், N.முரளிதரன்

**சிறப்பு நிருபர்கள்** : V.Vivek Bomb, P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன், P.மணிமாறன், A.R.முருகேசன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், G.நந்தகுமார், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமண்ட், S.அன்வர்தீன், L.லூயில்பெர்ணான்டஸ், P.ராஜராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், S.ரவிச்சந்திரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு, K.சதீஷ்குமார், R.நந்தகுமார், J.மணிகண்டன், S.வெங்கடேஷ், V.சுகுமாரன், K.பில்லர், R.சங்கர், Dr.J.காந்தியப்பன், S.ஜெயந்தி செல்வம், V.வேல்முருகன், S.தினேஷ்குமார், C.A.செந்தில்நாதன், S.பாஜி, G.முகமது அன்சாரி, முகமது தாவூத் ஹுசேன்

**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099.
Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com,
Website.www.policeparvai.com**

All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only

● தலையங்கம்



# மக்கள் ஆதரவை தக்க வைப்பாரா முதல்வர் விஜய்

*தமிழ்நாட்டில் இதுவரை காணாத வித்தியாசமான 2026, சட்டப்பேரவை தேர்தலில் தேர்தல் ஆணையம் எஸ்ஐஆரை நடைமுறைப்படுத்தியதால் வரலாறு காணாத மாற்றத்தை பெற்று தமிழ்நாட்டில் 85 சதவீதத்துக்கு மேல் வாக்குப்பதிவாகி வரலாறு படைத்துள்ளது திமுக, அ.திமுக வலுவான கூட்டணி அமைத்து சட்டப்பேரவை தேர்தலை சந்தித்தது. ஆனால், விஜய் அவர்களின் தமிழக வெற்றி கழகம் கட்சி கூட்டணியே இல்லாமல் தனித்து நின்று முதல் முறையாக சட்டப்பேரவை தேர்தலை சந்தித்து நாட்டு மக்கள் வளர்ச்சிக்கான 10 அம்ச வாக்குறுதிகளை அளித்து மேலும் தமிழ்நாட்டில் ஊழலற்ற நல்லாட்சியை தருவேன் என்று உறுதியளித்து முதல் தேர்தலிலே சுமார் ஒரு கோடியே 70 லட்சத்திற்கும் மேல் வாக்குகளை பெற்று தமிழ்நாட்டில் தனிப்பெரும் கட்சியாக வரலாறு படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. மொத்தம் 234 தொகுதிகளில் ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்ற பட்சத்தில் விஜய் 108 இடங்களில் வெற்றி பெற்றதால் ஆட்சி அமைக்க காங்கிரஸ், விடுதலை சிறுத்தை, கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், ஆகிய கட்சிகளின் ஆதரவைத் திரட்டி இடங்களுடன் பெரும்பான்மையை பெற்று முதலமைச்சராக பதவி ஏற்றார். இவ்வாறு இருக்கையில் ஊழலற்ற ஆட்சி அமைப்பேன் என்று மக்களின் ஆதரவை பெற்ற முதலமைச்சர் விஜய் ஆட்சி அமைக்க கூட்டணி சேர்த்த கட்சிகளின் அடிப்படையில் மிகவும் நிதானமாக கவனமாக ஊழலற்ற ஆட்சியை நடத்த செயல்பட வேண்டிய சூழல் உருவாகியுள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். எதையும் எதிர்கொள்ளும் மனோத்திடத்துடன் நிதானமாக செயல்பட்டு முதலமைச்சர் விஜய் அவர்கள் தமிழ்நாட்டில் ஊழலற்ற நல்லாட்சி நடத்துவார் என்ற நம்பிக்கையுடன் தமிழ் மக்கள்.*

**ஆசிரியர்**

## இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...

'போலீஸ் பார்வை' மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.




மே மாத ராசி பலன் 2026

# இந்த 3 ராசியினரின் வாழ்க்கையே மாறப்போகுது...

பொதுவாகவே புதிய மாதம் ஆரம்பிக்கப் போகின்றது என்றால் பெரும்பாலானவர்களுக்கு ராசி பலனை அறிந்துக்கொள்வதில் அதிக ஆர்வம் காணப்படும். அந்த வகையில் மே மாதத்துக்கான ராசிபலன் கணிப்பின் அடிப்படையில், ஜோதிடரீதியாக மே மாதம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

இந்த மாதத்தில் புதன், செவ்வாய், சூரியன் ஆகிய ஆற்றல் வாய்ந்த கிரகங்கள் தங்களின் ராசி மற்றும் நட்சத்திர பெயர்ச்சி நிகழவுள்ளது. அதன் தாக்கமாக 12 ராசிகளிலும் பிரதிபலித்தாலும், தொழில் மற்றும் நிதி ரீதியில் அதிகளவான அதிர்ஷ்ட பலன்களை பெறப்போகும் ராசிகள் குறித்து விரிவாக இந்த பதிவில் பார்க்கலாம்.

**ரிஷபம்**

ரிஷப ராசியினருக்கு பல மாதங்களாகவே தொழில் ரீதியாக நிலவிவந்த பிரச்சினைகள் நீங்கி சாதகமான சூழல் உருவாகும். இவர்களின் பொருளாதார நிலையில், இதுவரையில் இல்லாத அளவுக்கு ஏற்றம் உண்டாகப்போகின்றது. சூரிய பகவானின் ஆசியால் உயர் பதவியில் அமர்வதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது.பெரிய தொகை பணம் பரிசாகவோ அல்லது லாபமாகவோ கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது.

**சிம்மம்**

சிம்ம ராசிக்காரர்களுக்கு மே மாதத்தில் நிகழவுள்ள கிரக மாற்றங்களால் தொழில் மற்றும் பொருளாதாரத்தில் அமோக முன்னேற்றம் ஏற்படப்போகின்றது. நீண்ட கால கடின உழைப்புக்கான பலன்கள் இந்த காலகட்டத்தில் கிடைக்கும். பணியிடத்தில் சக ஊழியர்களுடன் இருந்து வந்த பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். உயர் அதிகாரிகளின் ஆதரவும் பாராட்டும் கிடைக்கும். பதவி உயர்வுகள், தலைமைப் பொறுப்புகளை அமர்வதற்கான யோகம் கூடிவரும்.

**விருச்சிகம்**

மே மாதம் விருச்சிக ரசியினரின் தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் பலவகையிலும் அதிர்ஷ்ட பலன்கள் கிடைக்கப் போகின்றது. இந்த காலகட்டத்தில் கடன் தொல்லைகள் நீங்கி பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும். தொட்டதல்லாம் வெற்றியாகும். வருமானம் ஈட்டுவதற்கான புதிய வழிகள் திறக்கும். முன்னைய முதலீடுகளில் இருந்து எதிர்பாராத பெரிய தொகை பணம் லாபமாக கிடைக்கும்.

**மேஷ ராசி அன்பர்களே!**




குடும்பத்தில் ஓரளவு மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். தவறான நண்பர்களைப் புரிந்து கொண்டு விலகி விடுவீர்கள். உங்களைத் தவறாகப் புரிந்துகொண்டவர்கள் தவற்ஆனால், உறவினர்கள் வகையில் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். மாதப் பிற்பகுதியில் நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உண்டு. சிலருக்கு பழைய வாகனத்தை மாற்றி, புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு உண்டு. அலுவலகப் பணிச்சுமை குறைவதால் உற்சாகமாகச் செயல்படும் சூழ்நிலை உண்டாகும். கண்டிப்பு காட்டிய அதிகாரி இனி கனிவுடன் நடந்துகொள்வார். உங்கள் கோரிக்கையை நிறைவேற்றவும் செய்வார்.தொழிலதிபர் களுக்கும் வியாபாரிகளுக்கும் அனுகூலப் பலன்கள் ஏற்பட்டாலும் சில பிரச்னை களும் ஏற்பட வாய்ப்பு உள்ளது. புதிய முதலீடு செய்யும்போது ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்யவும். விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும்.பெண்க ளுக்கு கணவன் மற்றும் குடும்பத்தினரிடம் மரியாதை அதிக ரிக்கும். பிள்ளைகளிடம் எதிர் பார்த்த பணம் கிடைக்கும். தாய்வீட்டில் இருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: குரு பகவானை**
**ஸ்லோகம்: குரு அஷ்ட்டகம் சொல்லுதல்**
**பரிகாரம்:குருபகவானுக்கு நெய்தீபம்**
**சந்திராஷ்டமம்: சித்திரை 19-ம் 02/05/26 சனிக்கிழமை இரவு 12.23 மணி முதல் 22-ம் தேதி 05/05/26 செவ்வாய்கிழமை பகல் 12.03 மணி வரை.**

**ரிஷப ராசி அன்பர்களே!**




எந்த ஒரு விஷயத்திலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டியது அவ சியம். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. அரசாங்கக் காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்படும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். சிலருக்கு பிள்ளைகளால் மகிழ்ச்சியும், பெருமையும் உண்டாகும். மாதப் பிற்பகுதியில் சிலருக்கு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். நிறைவேற்ற முடியாமல் பிரார்த்தனை நிறைவேற்றுவீர்கள்.

உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். குறித்த நேரத்துக்குள் வேலைகளை முடிக்க முடியாதபடி சில தடங்கல்கள் ஏற்படும். வேலையில்லாமல் கஷ்டப்படுபவர்களுக்கு மாதப் பிற்பகுதியில் குறைந்த ஊதியத்தில் வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் மாத முற்பகுதியில் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறும். பிற்பகுதியில் வியாபாரத்தில் சற்று பிற்போக்கான நிலையே காணப்படும். சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. பெண்களுக்கு குடும்பத்தை நிர்வகிப்பதில் பிரச்னை எதுவும் இருக்காது. கணவரின் அன்பும் ஆதரவும் கிடைப்பதால் மகிழ்ச்சி உண்டாகும். சகோதர வகையில் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும் அனுசரித்துச் செல்வது நல்லது.

**வணங்க வேண்டிய தெய்வம்: விநாயகர்**
**ஸ்லோகம்: விநாயகர் அகவல் சொல்லுதல்**
**பரிகாரம்: விநாயகருக்கு தேங்காய் எண்ணெயில் தீபம்**
**சந்திராஷ்டமம்: சித்திரை 22-ம் தேதி 05/05/26 செவ்வாய்கிழமை பகல் 12.04 மணி முதல் 24-ம் தேதி 07/05/26 வியாழக்கிழமை இரவு 11.16 மணி வரை.**

**மிதுன ராசி அன்பர்களே!**




அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும்.. தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணவரவு தேவைக் கும் சற்று அதிகம் கிடைப்பதால் செலவுகள் போக சிறிது சேமிக்கவும் முடியும். உடல் ஆரோக்கி யத்தில் கவனம் செலுத்தவும். மாதப் பிற்பகுதியில் தாய்வழி உறவினர்கள் மூலம் சுபநிகழ்ச்சிக் கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். சிலருக்கு முக்கிய பிரமுகர்களின் தொடர்பு கிடைக்கவும், அவர்கள் மூலம் பொருளாதாரரீதியாக நல்ல திருப்பம் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.மாத இறுதியில் நல்ல வேலை கிடைத்து விடும். வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பிரச்னை எதுவும் இருக்காது. தேவையான பணம் கிடைக்கும். உறவினர்களிடம் மதிப்பு மரியாதை அதிகரிக்கும். கணவர் நீங்கள் கேட்டதை வாங்கித் தருவார்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சிவபெருமான்**
**ஸ்லோகம்: வில்வாஷ்டகம் சொல்லுதல்**
**பரிகாரம்: சிவபெருமானுக்கு வில்வ அர்ச்சனை**
**சந்திராஷ்டமம்: சித்திரை 24-ம் தேதி 07/05/26 வியாழக்கிழமை இரவு 11.17 மணி முதல் 27-ம் தேதி 10/05/26 ஞாயிற்றுக்கிழமை காலை 8.37 மணி வரை.**

**கடக ராசி அன்பர்களே!**




பொருளாதார வசதி திருப்திகரமாக உள்ளது. எதிர்பாராத பல நன்மைகள் நடைபெறும். காரியங்களில் இருந்த தடை, தாமதங்கள் நீங்குவதுடன் புதிய முயற்சிகளும் அனு கூலமாக முடியும். செல்வாக்கு அதிகரிக்கும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும். அரசாங்க வகையில் இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். குலதெய்வ பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். வீடுமாறும் முயற்சியை தவிர்த்துவிடவும்.

வேலையில் இருப்பவர்களுக்கு நிர்வாகத்தினரின் பாராட்டுகள் கிடைக்கும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். வேலையில்லாமல் தவிப்பவர்களுக்கு கூடிய விரைவில் வேலை கிடைக்கும். சிலர் சக ஊழியர்களின் வேலையையும் சேர்த்துப் பார்க்கவேண்டி வரும். தொழிலதிபர்கள், வியாபாரிகளுக்கு அரசின் சலுகை, வங்கிக் கடன் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். அவர்களின் சாமர்த்தியத்தால் விற்பனையும் லாபமும் கூடுதலாகக் கிடைக்கக்கூடும். பெண்களுக்கு குடும்பத்தாரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சனிஸ்வரர்**
**ஸ்லோகம்: பைரவர் அஷ்டகம் சொல்லுதல்**
**பரிகாரம்: சனீஸ்வர பகவானுக்கு எள்ளெண்ணெய் தீபம்**
**சந்திராஷ்டமம்: சித்திரை 27-ம் தேதி 10/05/26 ஞாயிற்றுக் கிழமை காலை 8.38 மணி முதல் 29-ம் தேதி 12/05/26 செவ்வாய்கிழமை மாலை 3.28 மணி வரை.**

## சிம்ம ராசி அன்பர்களே!




எதிலும் வெற்றியே பெறுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்டிருந்த பிரச்னை நீங்கி, ஒற்றுமை ஏற்படும். உங்கள் முயற்சி களுக்குக் குடும்பத்தினரின் முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சிறிய அளவில் பாதிக்கப்பட்டாலும் உடனே நிவாரணம் கிடைத்துவிடும். மாத முற்பகுதியில் சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். பிற்பகுதியில் அவர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்பதால், அவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும். தாய்மாமன் மூலம் எதிர்பார்த்த காரியம் அதிக அலைச்சலைத் தருவதுடன் வீண் விரயத்தையும் ஏற்படுத்தும். பிள்ளைகள் பிடிவாதமாக நடந்துகொள்வது சற்று மனவருத்தம் தரும். கூடுமானவரை அவர்களைக் கண்டிக்காமல் விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது. அலுவலகப் பணியில் இருப்பவர்களுக்கு பணிகளைக் குறித்த நேரத்தில் முடித்துவிட முடிவதுடன் சக ஊழியர்களுக்கும் தக்க ஆலோசனை கூறி உதவி செய்வீர்கள். அக்கம்பக்கத்தில் இருக் கும் பெண்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

**வணங்க வேண்டிய தெய்வம்: சனிஸ்வரர்**
**ஸ்லோகம்: ஹனுமன் சாலிசா சொல்லுதல்**
**பரிகாரம்: ஆஞ்சநேயருக்கு துளசி அர்ச்சனை**
**சந்திராஷ்டமம்: சித்திரை 29-ம் தேதி 12/05/26 செவ்வாய்க்கிழமை மாலை 3.29 மணி முதல் 31-ம் தேதி 14/05/26 வியாழக்கிழமை இரவு 8.05 மணி வரை**

## கன்னி ராசி அன்பர்களே!




நின்று நிதானித்து செயல்படவேண்டிய மாதம். புதிய முயற்சிகளில் முழு ஈடுபாடு இருந்தால் மட்டுமே சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். குடும்பத்தினர் நீங்கள் எடுக்கும் முடிவுகளுக்கு முழுமையாகக் கட்டுப்படுவர். பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறி, உங்கள் எண்ணப்படி நடந்துகொள்வார்கள். தந்தைவழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். சிலருக்கு சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். புதிய மின்சார, மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். அரசாங்க வகையில் வீண் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கக் கூடும். மாதப் பிற்பகுதியில் வீடு, நிலம் சம்பந்தமான விஷயங்கள் அனுகூலமாக முடியும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.அலுவலகப் பணிகளை குறித்த நேரத்தில் முடித்துவிட முடியும். மாதப் பிற்பகுதியில் அலுவலகத்தில் சக ஊழியர்களால் மறைமுக விமர்சனங்களுக்கு ஆளாக நேரிடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் வழக்கம்போல் இருந்தாலும் செலவுகள் அதிகரிக்கும். பெண்களுக்கு, கணவனின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு எதிர்பார்த்த சுபச்செய்தி வந்து சேரும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தி**
**ஸ்லோகம்: நவக்கிரஹ ஸ்லோகம் சொல்லுதல்**
**பரிகாரம்: தட்சிணாமூர்த்தி, விநாயகர் வழிபாடு**
**சந்திராஷ்டமம்: சித்திரை 31-ம் தேதி 14/05/26 வியாழக்கிழமை இரவு 8.06 மணி முதல் வைகாசி 2-ம் தேதி 16/05/26 சனிக்கிழமை இரவு 11.11 மணி வரை**

## துலா ராசி அன்பர்களே!




பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய மாதம். புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். அடுத்தடுத்து பிரச்னைகள் வந்தாலும் தெய்வ அனுகிரகத்தால் சுலபமாகச் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைப்பதுடன், அவர்களில் சிலரால் சங்கடங்களும் ஏற்படக்கூடும். சிலருக்கு உஷ்ணம் தொடர்பான ஆரோக்கியக் குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் கவனமாக இருக்கவும். மேலும் செரிமானப் பிரச்னைகளும் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் உணவு விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பணிகளை முடிப்பதில் சில தடைகள் ஏற்பட்டு நீங்கும். வாடிக்கையாளர்களுடன் சுமுகமான சூழ்நிலை ஏற்படும். மாதப் பிற்பகுதியில் வியாபாரத்தில் புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உங்களால் குடும்பத்தின் மதிப்பும் மரியாதை யும் அதிகரிக்கும். வீட்டில் இருந்தபடி அலுவலக வேலைகளைப் பார்க்கும் பெண்களுக்கு சலுகைகள் கிடைக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: நந்திதேவர்**
**ஸ்லோகம்: விநாயகர் அஷ்டகம் சொல்லுதல்**
**பரிகாரம்: விநாயகருக்கு அறுகம்புல் அர்ச்சனை**
**சந்திராஷ்டம தினங்கள்: வைகாசி 2-ம் தேதி 16/05/26 சனிக்கிழமை இரவு 11.12 மணி மாதம் 4-ம் தேதி 18/05/26 திங்கள்கிழமை இரவு 1.32 மணி வரை**

## விருச்சிக ராசி அன்பர்களே!




தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தாய்வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த சுபச்செய்தி இந்த மாதம் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மாத முற்பகுதியில் வீடு, நிலம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வ பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வழக்குகளில் சாதகமான போக்கு ஏற்படும். இழுபறியாக இருந்த அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். வேலையில் இருப்பவர்களுக்கு பிரச்னை எதுவும் இருக்காது. எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். சக ஊழியர்களால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். அரசுப் பணியில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் அதிகரித்தாலும் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். தொழிலதிபர்கள், வியாபாரிகள் மாதப் பிற்பகுதியில் சிறப்பான பலன்களைக் காணலாம். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். எதிர்பாராதபடி லாபம் அதிகரிப்பதால் மகிழ்ச்சி ஏற்படும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட போட்டிகள் குறையும். பெண்கள் குடும்பத்தாரிடம் நன்மதிப்பை பெறுவர். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அனுகூலமாக இருப்பர். சுயதொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். லாபமும் கூடுதலாகக் கிடைக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம் :சூரிய பகவான்**
**ஸ்லோகம்: சூரிய காயத்திரி சொல்லுதல்**
**பரிகாரம்: சூரியனுக்கு செம்பருத்தி மலரால் அர்ச்சனை**
**சந்திராஷ்டமம்: வைகாசி 4-ம் தேதி 18/05/26 திங்கள்கிழமை இரவு 1.33 மணி முதல் 7-ம் தேதி 21/05/26 வியாழக்கிழமை அதிகாலை 4.07 மணி வரை**

**தனுசு ராசி அன்பர்களே!**




ஓரளவுக்கு சாதகமான மாதம். பணவரவு போதுமான அளவுக்கு இருக்கும். செலவுகளும் குறைவாகவே இருப்பதால் கடன் வாங்கவேண்டிய அவசியம் இருக்காது என்பது ஆறுதலான விஷயம். அந்நியர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரை யொருவர் அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை இழுபறியாக இருந்தாலும் சாதகமாக முடியும். சிலருக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். மாதப் பிற்பகுதியில் பிறருக்குக் கொடுத்து வராது என்று விட்டுவிட்ட கடன் தொகை கிடைப்பது மகிழ்ச்சி தரும். வீடு மாறும் எண்ணம் இருந்தால்,அதற்கான முயற்சியை மாதப் பிற்பகுதியில் மேற்கொள்வது சாதகமாக முடியும். மாத முற்பகுதியில் தாய்மாமன் மூலம் எதிர்பாராத ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் கூடுமானவரை அவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. மாதப் பிற்பகுதி யில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படும். தொழிலதிபர்கள், வியா பாரிகளுக்கு அலைச்சல் அதிகரித்தாலும், நல்ல வளார்ச்சி யும், பணவரவும் இருக்கும். பெண்களுக்கு தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: பெருமாள்**
**ஸ்லோகம்: புதன் காயத்திரி சொல்லுதல்**
**பரிகாரம்: பெருமாள் கோயிலில் நெய்தீபம் ஏற்றுவது**
**சந்திராஷ்டமம்: வைகாசி 7-ம் தேதி 21/05/26 வியாழக்கிழமை அதிகாலை 4.08 மணி முதல் 9-ம் தேதி 23/05/26 சனிக்கிழமை காலை 7.48 மணி வரை**

**மகர ராசி அன்பர்களே!**




பெரியோர்களின் ஆதரவும், ஆலோசனையும் கிடைக்கும். மதிப்பு, மரியாதை சிறப்பாக இருக்கும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். பொன் பொருள் சேரும். . குடும்பத்தில் சிறு சிறு பிரச்னைகள் ஏற்பட்டு மறையும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்களுடன் வீண் விரோதம் வரக்கூடும். தந்தை வழி உறவினர்களால் சிற்சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். தந்தையின் உடல் நலனில் கவனம் செலுத்தவும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும். மாதப் பிற்பகுதியில் எதிரிகளால் இடையூறுகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கையாக இருக்கவும். ஊடகத்துறையில் இருப்பவர்கள் மாதப் பிற்பகுதியில் சற்று நிதானத்துடன் செயல்படவேண்டியது அவசியம். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பலன் கிடைப்பதற்குக் கூடுதலாக உழைக்க வேண்டி வரும். முக்கிய முடிவுகளை எடுப்பதில் நிதானம் அவசியம். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். போட்டி யாளர்களால் தொல்லைகள் ஏற்படக்கூடும். பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர்.

**வணங்க வேண்டிய தெய்வம் : முருகப் பெருமான்**
**ஸ்லோகம்: கந்த குரு கவசம் சொல்லுதல்**
**பரிகாரம்: முருகனுக்கு செவ்வரளி மலர்களால் அர்ச்சனை**
**சந்திராஷ்டமம்: வைகாசி 9-ம் தேதி 23/05/26 சனிக்கிழமை காலை 7.49 மணி 11-ம் தேதி 25/05/26 திங்கள்கிழமை பகல் 1.24 மணி வரை.**

**கும்ப ராசி அன்பர்களே!**




இந்த மாதம் முழுவதும் சிறப்பான வளர்ச்சி கிடைக்கும். செயலில் வெற்றி, பொருளா தார வளம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தொழிலில் விருத்தியைக் காணலாம். குடும்பத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக் கும். உறவினர்களுடனான உறவு சுமுகமாகக் காணப்படும். குடும்பத் தோடு தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தினரிடையே மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். உங்களுடைய ஆலோசனை மிகுந்த முக்கியத் துவம் பெறும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை நல்லபடி முடியும். தந்தை யிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சகோதரர்களால் சில பிரச்னைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும். அரசாங்க அதிகாரிகள் உதவிகரமாக இருப்பார்கள். பணியாளர்கள் பணியில் திருப்தி காண்பர். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர். மாதத் தொடக் கத்தில் வேலையில் கவனமாக இருக்கவும். எதிர்பார்ப்பு நிறைவேறும். திடீர் வருமானத்துக்கு வாய்ப்பு உண்டு. வியாபாரம் வழக்கம்போல் நடைபெற்றாலும் வீண் விரயங்களும் ஏற்படும். சக வியாபாரி களால் மறைமுக இடையூறுகள் ஏற்படும் என்பதால் சற்று கவனமாக நடந்துகொள்ளவும். பணியாளர்களுக் காக செலவு செய்யவேண்டி வரும். பெண்களுக்கு குடும்பத்தில் ஆனந்தம் அதிகரிக்கும். தோழிகள் ஆதரவுடன் செயல்படுவர்.

**வணங்க வேண்டிய தெய்வம்: துர்க்கை அம்மன்**
**ஸ்லோகம்: துர்க்கா ஷட்டகம் சொல்லுதல்**
**பரிகாரம்: துர்கை வழிபாடும்**
**சந்திராஷ்டமம்: வைகாசி 11-ம் தேதி 25/05/26 திங்கள்கிழமை பகல் 1.25 மணி முதல் 13-ம் தேதி 27/05/26 புதன்கிழமை இரவு 9.23 மணி வரை**

**மீன ராசி அன்பர்களே !**




பொருளாதார வளம் கூடும். உடல்நலம் மேம்படும். சிலருக்கு ஏற்பட்டிருந்த அவப்பெயர் மறைந்து, செல்வாக்கு அதிகரிக்கும். பகைவர்களால் இருந்து வந்த இடையூறுகள் மறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கக்கூடும். உங்களைத் தவறாகப் புரிந்துகொண்ட உறவினர்கள், தங்கள் தவற்றை உணர்ந்து, வலிய வந்து மன்னிப்புக் கேட்பார்கள். நண்பர்கள் உங்கள் முயற்சிகளுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சி தரும். தந்தையுடன் மனவருத்தம் ஏற்படக்கூடும் என்பதால் அவருடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மாத முற்பகுதியில் சகோதரர்களால் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிற்பகுதியில் அவர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். வேலை செய்பவர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். தொழிலதிபர்கள், வியாபாரி களுக்கு பொருளாதார வளம் கூடும். பெண்களுக்கு உற்சாகம் தரும் மாதம். புகுந்தவீட்டு உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள். பிள்ளைகளால் உறவினர்களிடையே உங்கள் மரியாதையும் அதிகரிக்கும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: தட்சிணாமூர்த்தி**
**ஸ்லோகம்: குரு ஸ்லோகம் சொல்லுதல்**
**பரிகாரம்: தட்சிணாமூர்த்திக்கு நெய்தீபம் ஏற்றுவது**
**சந்திராஷ்டமம்: வைகாசி 13-ம் தேதி 27/05/26 புதன்கிழமை இரவு 9.24 மணி முதல் 16-ம் தேதி 30/05/26 சனிக்கிழமை காலை 7.41 மணி வரை**



# நவபாஷன சிலைகள் எங்கெல்லாம் இருக்கிறது?

தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் நவபாஷாண சிலை வழிபாடு என்றால் முதலில் நம் மனதில் உதயமாவது பழநி முருகன். இங்குள்ள தண்டாயுதபாணி என்னும் முருகன் சிலையே முதலில் கண்டறியப்பட்ட நவபாஷாண சிலை ஆகும். இவை இரண்டும் ' போகர்' உருவாக்கியதாக கூறப்படுகிறது.


இதைத்தவிர்த்து இரண்டாவதாகவும் ஓர் நவபாஷாண சிலை கண்டறியப்பட்டது. அது, கொடைக்கானலில் உள்ள பூம்பாறை கிராமத்தில் அமைந்துள்ள 'குழந்தை வேலப்பர் 'முருகன் கோவிலாகும்.

**நவபாஷாண பெருமாள்**


விருதுநகர், சிவகாசி அருகே உள்ள காரிசேரி லட்சுமி நாராயணர் கோவிலில் நவபாஷாணத்தில் அமைந்த பெருமாள் உள்ளார். 28 நாட்கள் விரதம் இருந்து, பின்பு லட்சுமி நாராயணரை வடிவமைத்துள்ளார்.

போகர் சித்தர் செய்த மூன்று நவபாஷாண சிலைகளில் பழநி, பூம்பாறை தவிர்த்து மூன்றாவது சிலை எங்கே உள்ளது? "போகர் சித்தர் செய்த மூன்று நவபாஷாண

ஓம் காளி ஓம் நமசிவாய






# கருடசித்தர்

**Dr.பாலகிருஷ்ண சுவாமி**
**எரசை, தேனி மாவட்டம்.**

சிலைகளில் பழநி, பூம்பாறை தவிர்த்து மூன்றாவது சிலை எங்கே உள்ளது?"

கொடைக்கானலில் உள்ள மதிகெட்டான் சோலை உள்ளே இந்த மூன்றாவது நவபாஷாண சிலை இருப்பதாக பலர் கூறக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

### நவபாஷாண பைரவர்

சிவகங்கை மாவட்டம் பெரிச்சி கோயில் சுகந்தவணேஷ்வரர் கோயில் உள்ளது. இத்தலத்தில் உள்ள இரட்டை முக பைரவர் நவபாஷாணத்தால் ஆனவர். இவர் பலஆயிரம் ஆண்டு பழமையானவர். பழனி முருகன் கோயிலை நவபாஷாணத்தால் வடிக்கும் முன்பே இந்த பைரவர் சிலை நவபாஷாணத்தால் உருவானது. இந்த சிலை சித்தர்கள் 12,000 ஆண்டுகளாக வணங்குவதாக நம்பிக்கை நிலவுகிறது. எட்டு கைகளுடன் ஆயுதம் ஏந்தி கபால மாலையுடன் இருக்கும் இவருக்கு பௌர்ணமி நாட்களில் சிறப்பு பூஜை செய்யப்படுகிறது. இந்த நவபாஷாண சிலை அதீத சக்தி வாய்ந்த சிலையாகும்.

### நவபாஷாணம் என்றால் என்ன?

நவம் என்றால் ஒன்பது ஆகும். பாஷாணம் என்றால் விஷம் என்று பொருள். நவ பாஷாணம் என்பது ஒன்பது வகையான விஷங்களை சித்தர்கள் முறைப்படி கட்டுவதாகும்.

பாஷாணங்களில் மொத்தம் 64 வகைகள் உள்ளன.இதில் நீலி என்றொரு வகையும் உண்டு. நீலி மற்ற 63 பாஷாணங்களை செயலிழக்க கூடியதாகும்.

ஒன்பது வகையான பாஷாணக்களுக்கும் தனித்தனியாக வேதியல், இயற்பியல் பண்புண்டு.அதை சித்தரியல் முறைப்படி அணுக்களை பிரித்து மீண்டும் சேர்ப்பதை நவபாஷாணம் கட்டுதல் என்பார்கள்.ஒன்பது பஷாணங்கள் என்னவென்றால்..,

1.சாதிலிங்கம், 2.மனோசிலை, 3.காந்தம், 4.காரம், 5.கந்தகம், 6.பூரம், 7.வெள்ளை பாஷாணம், 8.கௌரி பாஷாணம், 9.தொட்டி பாஷாணம்.


இந்த நவ பாஷாணத்தின் தன்மையில் நவகிரகங்களின் குணங்கள் ஒத்துள்ளன. நவபாஷாண கட்டு என்பது சித்தர்களுக்கு மட்டுமே சாத்தியமான விஷயமாகும். நவபாஷாணத்தால் உருவாக்கப்படும் தெய்வ சிலைகள்,நவக்கிரகங்களின் சக்தியை பெற்றுவிடுகிறது என்பது நம்பிக்கையாகும்.

தமிழ் நாட்டில் மூன்று இடங்களில் நவபாஷாண சிலைகள் உள்ளன. பழனி மலைக்கோவில், கொடைக்கானல் அருகே உள்ள பூம்பாறை, குழந்தை வேலப்பர் கோயில். மற்றொன்று தேவிப்பட்டினத்தில் அமைந்துள்ளது,இதில் இரண்டு போகர் உருவாக்கியவை.தேவிப்பட்டினத்தில் உள்ளதை யார் உருவாக்கினார் எனத் தெரியவில்லை.

நவபாஷாணங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிரகத்தின் சுபாவ த்தை உடையது; நவபாஷாணங்களால் உருவான சுவாமி சிலையை வழி படுபவர்களுக்கு நவக்கிரகங்களால் ஏற்படும் சிரமங்கள் நீங்கும்.

பழனிமலை தண்டாயுதபாணியை வழிபடுபவர்கள் நவக்கிரகங்களை ஒருங்கே வழிபடுவதாக அர்த்தம். இதை உணர்ந்தே போகர் பழனி மலையில் நவபாஷாணமுருகர் சிலையை உருவாக்கினார். இந்த சிலைக்கு அபிஷேகம் செய்து அந்த அபிஷேக தீர்த்தத்தை அருந்தினால் / சாப்பிட்டால் தீராத நோய் எதுவாக இருந்தாலும் தீர்ந்துவிடும்.

# மரணத்தை வென்ற சேதன் சீட்டா



ஒரு துப்பாக்கி குண்டு பட்டாலே உயிரிழக்கும் வாய்ப்பு இருக்கும் போது, 9 குண்டுகள் உடலைத் துளைத்தும் மரணத்தை வென்று மீண்டும் வாழ்க்கைக்கு திரும்பிய ஒரு உண்மையான போராளியின் கதையை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?

இது சினிமா அல்ல இது சிஆர்பிஎப் (CRPF) அவர்களின் வாழ்க்கையில் நடந்த அதிசயமான போராட்டம்.

2017 பிப்ரவரி 14 அன்று, ஜம்மு காஷ்மீரின் பாண்டிப்போரா பகுதியில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைக்கு தலைமை தாங்கி இருந்தார் 45–வது படைத்தள கமாண்டண்ட் சேதன் சீட்டா.

திடீர் தாக்குதலில் அவரது தலையிலும், கண்களிலும், வயிற்றிலும் 9 குண்டுகள் பாய்ந்தன. ரத்தம் பெருகிக் கொண்டிருந்த போதும் அவர் தன் துப்பாக்கியை கீழே வைக்கவில்லை. தனது சக வீரர்களை காப்பாற்றி, ஒரு முக்கிய லஷ்கர் கமாண்டரை வீழ்த்திய பிறகே அவர் மயங்கி விழுந்தார். டெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவ மனையில் ஒரு மாதம் கோமாவில் இருந்த அவர், நம்ப முடியாத விதமாக மீண்டும் உயிர் பெற்றார்.

நல்ல அரசியல் மற்றும் அர்த்தமுள்ள ஜனநாயகத்தை நிலைநிறுத்த இப்படிப்பட்ட வீரர்களின் தியாகம் மிகவும் அவசியம். ஆட்சியில் வெளிப்படைத்தன்மை கொண்டு வருவதையும், நல்ல நிர்வாகத்தை உறுதி செய்வதையும் விட உயர்ந்தது ஒரு வீரனின் சேவை. துல்லியமான பொறுப்புணர்வும், அசாதாரண தலைமைத்துவமும் கொண்ட அவரது செயல் உண்மையான பொது சேவையாகும்.

இந்த நாட்டிற்காக தனது உயிரையே பணயம் வைத்த அவரது வீரத்திற்காக, அவருக்கு 'Kirti Chakra' விருது வழங்கப்பட்டது. சவால்களை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான மிகப்பெரிய உதாரணம் இவரின் வாழ்க்கை. மரணத்தையே பயமுறுத்தும் அளவுக்கு அவரது தேசப்பற்று உயர்ந்தது.



# அரசுப் பள்ளியில் பயில்வது நமது பெருமை

## ஆண்டு விழாவில் மாநகராட்சி பொறியாளர் பேச்சு

மாநகராட்சித் தொடக்கப்பள்ளி செல்லம்மாள் காலனியில் ஆண்டுவிழா அண்மையில் முப்பெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

பள்ளித் தலைமை ஆசிரியர் வே.நாகராஜ் கணேஷ் குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் ஜெ.சுகிர்தா அவர்கள் இவ்விழாவிற்கு தலைமை தாங்கினார்.

கோத்தகிரி நகராட்சி பொறியாளர் சரவணக்குமார் அவர்கள் சிறப்புரை வழங்கினார். திருப்பூர் வடக்கு வட்டாரக் கல்வி அலுவலர் திரு.லோகநாதன் பூபாலன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பெற்றோர் ஆசிரியர் கழக பொருளாளர் திரு.நாகராஜ் அவர்கள், பள்ளி புரவலர் சிவப்பிரகாஷ், மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் திரு. அருண்பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நகராட்சி பொறியாளர் சரவணக்குமார் அவர்களின் சிறப்புரையில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் தான் ஒன்றுமே தெரியாது வருகின்ற இளம் குழந்தைகளை அன்பாக, ஆசையாக அரவணைத்து பாடங்களை ஒழுக்கங்களைப் போதிக்கின்றனர். அரசுப் பள்ளியில் பயில்வது நமக்கான பெருமை இரண்டாவது பெற்றோராக இருந்து ஆசிரியர்கள் வழிகாட்டுகின்றனர் என அரசுப் பள்ளியின் பெருமையைக் கூறினார்.

பள்ளி வளாகத்தின் முன் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் மாணாக்கர் கலந்து கொண்டு மிகச் சிறப்பாக நடனமாடினர். அத்தோடு தமிழ் மற்றும் ஆங்கிலப் பேச்சு, அவர்களுக்கு பள்ளியின் சார்பாக பரிசுகள் வழங்கப்பட்டது. மாவட்ட அளவில் சிலம்பம்,கராத்தே,ஓவியப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணாக்கருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. ஆசிரியை மு.சாந்தி அவர்கள் நன்றியுரை கூறினார்.

இந்நிகழ்வில் பெற்றோர்களும், பொது மக்களும், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வினை ஆசிரியர்களும், பள்ளி மேலாண்மைக் குழு, சோழன் தமிழ் அறக்கட்டளை உறுப்பினர்களும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

தலைமை நிருபர்: A.மாரிராஜா, திருப்பூர்.



# அரசியல் நாகரீகத்தை பின்பற்றிய பெருந்தலைவர்

அரசியல் நாகரீகம் என்றால் என்ன? என்பதை தன் வாழ்நாளில் வாழ்ந்து காட்டி பிறருக்கு கற்றுக் கொடுத்து விட்டு சென்றவர் பெருந்தலைவர் காமராஜர்.

விருதுநகரில் காமராஜரை எதிர்த்துப் போட்டியிட்ட சீனிவாசன் அவர்களுக்கு திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. திருமணத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களுக்கு அழைப்பு கொடுத்தார் சீனிவாசன்.

சீனிவாசனுக்கு எப்படியாவது பெருந்தலைவர் காமராஜரை தன்னுடைய திருமணத்திற்கு அழைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. தன் மனதில் இருப்பதை தன் நண்பர்களோடு பகிர்ந்து கொண்டார் சீனிவாசன்.

காமராஜரை நாம் நேரில் சென்று அழைத்தால் தன்னுடைய திருமணத்திற்கு வருவாரா? திருமணத்திற்கு அழைப்பு கொடுப்பதற்கு காமராஜருடைய இல்லத்திற்கு சென்றால் நம்மை உள்ளே அனுமதிப்பார்களா என்றெல்லாம் பல நாட்கள் உட்கார்ந்து யோசித்தார் சீனிவாசன்.

ஒரு நாள் திடீரென்று என்ன நடந்தாலும் பரவாயில்லை நாம் காமராஜருடைய வீட்டிற்கு சென்று காமராஜருக்கு அழைப்பிதழ் கொடுப்போம், அவர் திருமணத்திற்க்கு வராவிட்டாலும் பரவாயில்லை. அழைப்பிதழ் கொடுக்கின்ற இடத்தில் அவரிடத்தில் ஆசிர்வாதத்தை பெற்றுக் கொள்வோம். யாராவது நம்மை ‘உள்ளே வராதே, வெளியே போ’ என்று சொன்னார்கள் என்றால், காமராஜரின் வீட்டு வாசலில் நின்று கொள்வோம். மனம் இறங்கி எப்படியாவது நம்மை உள்ளே அழைப்பார்கள் என்று மனதில் நினைத்துக் கொண்டு காமராஜருக்கு அழைப்பு கொடுக்க புறப்பட்டார் சீனிவாசன்.

காமராஜரின் இல்லத்திற்கு சென்றார் சீனிவாசன். உள்ளே காமராஜரை பார்ப்பதற்கு அனுமதி கேட்டார் அனுமதி கொடுக்கப்பட்டது. தயங்கிய உள்ளத்தோடு காமராஜர் இடத்தில் சொன்னார் என்னுடைய திருமணத்திற்கு நீங்கள் கண்டிப்பாக வரவேண்டும் என்று

கேட்டார். காமராஜருக்கு சீனிவாசனை அடையாளம் தெரியவில்லை. சற்று தயக்கத்தோடு யோசித்தார் காமராஜர்.

சட்டென்று காமராஜரோடு இருந்த இரா.கிருஷ்ணசாமி நாயுடு, "இவர் தான் சீனிவாசன் உங்களை எதிர்த்து நின்று போட்டியிட்டு வெற்றி பெற்றவர்" என்று சொன்னார்.

காமராஜர் இதைக் கேட்டவுடன், சீனிவாசனை பார்த்து, "வாங்க, வாங்க, உட்காருங்க" என்று சொல்லி, "என்ன விஷயம் சொல்லுங்க" என்று கேட்டார்.

சீனிவாசனோ தயக்கத்தோடு "எனக்கு திருமணம் ஏற்பாடு செய்திருக்கிறேன். நீங்கள் கண்டிப்பாக திருமணத்திற்கு வர வேண்டும்" என்று சொன்னார்.

காமராஜர் சீனிவாசனை பார்த்து "நான் கண்டிப்பாக வர வேண்டுமா? நான் வந்து என்ன செய்யப் போகிறேன்" என்று சொன்னார்.

சீனிவாசன் காமராஜரின் காலில் விழுந்து வணங்கி தன்னை வாழ்த்தும் படி கேட்டுக் கொண்டார். காமராஜரோ நீங்கள் நன்றாக இருப்பீர்கள் என்று சொல்லி விட்டு, "ஆகட்டும் பார்க்கலாம்" என்று சொல்லி சீனிவாசனை அனுப்பி வைத்தார்.

சீனிவாசனுக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சி. நம்மை காமராஜர் பார்ப்பதற்கு அனுமதிப்பாரா? நம்முடன் பேசுவாரா? அல்லது அவரோடு இருப்பவர்கள் நம்மிடம் ஏதாவது தகராறு செய்வார்களோ? என்றெல்லாம் அச்சத்தோடு சென்ற சீனிவாசன் காமராஜரின் வீட்டை விட்டு வெளியே போகும் போது மகிழ்ச்சியோடு சென்றார்.

சீனிவாசனின் திருமண நாள் அன்று பெருந்தலைவர் காமராஜர் திருமணத்திற்கு சென்றார். அந்த திருமண விழாவில் கலந்து கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாபெரும் தலைவர்கள் எல்லாம் காமராஜரை பார்த்து வணங்கி எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்கள்.

மணமக்களை வாழ்த்தி விட்டு காமராஜர் வெளியே வருகின்ற போது, அங்கு நின்று கொண்டிருந்த டாக்டர் கலைஞர் உட்பட திராவிட முன்னேற்றக் கழக தலைவர்கள் பெருந்தலைவரின் கார் வரையிலும் வந்து நின்று காமராஜரை வழி அனுப்பி வைத்தார்கள். இப்படி அரசியல் நாகரிகத்தை பிறருக்கு கற்றுக் கொடுத்தவர் பெருந்தலைவர் காமராஜர்.

---

# செந்தமிழ் சிற்பி

## முனைவர் ந.சஞ்சீவி



மே 2, 1927 பேராசிரியர் முனைவர் ந.சஞ்சீவி பிறந்தநாள். திருச்சி தூய வளனார் கல்லூரியில் 1941–43ஆம் கல்வியாண்டுகளில் பயின்று இடைக்கலைப் (Intermediate) பட்டம் பெற்றார். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1943–45–ம் கல்வியாண்டுகளில் பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம், முனைவர் மு.வரதராசன் ஆகிய பேராசிரியர்களிடம் பயின்று சிறப்புத் தமிழில் இளங்கலைப் பட்டமும், 1947–50–ம் கல்வியாண்டுகளில் பயின்று கீழ்த்திசை மொழிகளில் சிறப்பு இளங்கலைப் பட்டமும் (Bachelor of Oriental Language - Honours) பெற்றார்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1963–ம் ஆண்டில் பேராசிரியர் இரா.பி.சேதுப்பிள்ளையின் வழிகாட்டுதலில் புறநானூற்று ஆராய்ச்சி என்னும் பொருளில் ஆய்வு செய்து இலக்கிய முதுவர் (Master of Literature) பட்டமும் பேராசிரியர் மு.வ.வின் வழிகாட்டுதலில் சங்க நூல்களில் அடைவளம் என்னும் பொருளில் ஆய்வுசெய்து 1969–ம் ஆண்டில் முனைவர் (Doctor of Philosophy) பட்டமும் பெற்றார். தமிழ் மொழிக்காக, சமுதாயத்திற்காக, அறிவியல் வளர்ச்சிக்காக பாடுபட்ட மாமனிதர்.



# எஸ்பிஜி வீரர்களுக்கு பிரதமர் மோடி விருந்து

சமீபகாலமாக இந்திய அரசியலில் பல பரபரப்பான நிகழ்வுகள் நடந்து வரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தனது பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் எஸ்பிஜி (SPG) வீரர்களுக்காகச் செய்த ஒரு செயல் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. தங்களைப் பாதுகாப்பவர்களுக்குத் தானே முன்வந்து நன்றிக்கடன் செலுத்திய இந்த நிகழ்வு, அதிகாரிகளிடையே பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஏப்ரல் மாத இறுதியில், பிரதமர் மோடி மேற்கு வங்கத்தில் தீவிரமான தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து சிக்கிம் மாநிலத்திற்குப் பயணம் மேற்கொண்ட அவர், பிறகு தனது தொகுதியான வாரணாசிக்குச் சென்றார். 4 நாட்கள் டெல்லிக்கு வெளியே தங்கியிருந்த இந்தச் சுழல் பயணங்களில் பாதுகாப்புப் பணி என்பது மிகக் கடுமையானது. குறிப்பாக 'ரோடு ஷோ' (Road Show) போன்ற நேரங்களில் பொதுமக்களின் கூட்டத்திற்கு நடுவே பிரதமரை அரணாக நின்று பாதுகாப்பது எஸ்பிஜி வீரர்களுக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்தது.

ஏப்ரல் 29 அன்று இரவு டெல்லி திரும்பிய பிரதமர், மறுநாளே டெல்லி துவாரகாவில் அமைந்துள்ள எஸ்பிஜி தலைமையகத்திற்குச் சென்றார். அங்குப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் வீரர்கள், ஓட்டுநர்கள் என சுமார் 4,500 பேருக்கு பிரம்மாண்டமான விருந்து அளித்தார்.

"என்னைப் பாதுகாப்பதில் நீங்கள் எவ்வளவு பிரச்சனைகளைச் சந்திக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். எனக்கு அரணாக இருந்து, நீங்கள் பாதுகாத்ததற்கு நன்றி. ஆண்டவனுக்கும் நன்றி." – என அந்த விருந்தின் போது உருக்கமாகப் பேசினார். இதுவரை இந்தியாவில் எந்த ஒரு பிரதமரும், தன்னைப் பாதுகாக்கும் ஆயிரக்கணக்கான எஸ்பிஜி வீரர்களுக்குத் தனிப்பட்ட முறையில் விருந்து அளித்து, நேரில் நன்றி தெரிவித்தது கிடையாது. வீரர்களின் கடின உழைப்பை வெறும் கடமையாகப் பார்க்காமல், அதற்கு மனிதநேயத்துடன் அவர் நன்றி தெரிவித்தது அதிகாரிகளிடையே பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

**தகவல்: ஜோதிஜி, திருப்பூர்**

## கவியரசு கண்ணதாசன் முத்துராமலிங்க தேவர் குறித்து எழுதிய கவிதை..





*“நீதியில் மறவன்; நல்ல*
*நேர்மையில் மறவன்; நாட்டில்*
*ஆதிநாள் தொட்டே போரில்*
*அருஞ்செயல் புரிந்த செம்மல்;*
*சாதியில் மறவன்; எங்கள்*
*தமிழ்முத்து ராமலிங்கம்!*
*வாதிடும் திறமைக் கெல்லாம்*
*வரலாற்றில் ஒருவன் அன்னான்!*
*நல்லறம் வளர்த்துக் காத்த*
*நைச்டிக பிரம்மச் சாரி!*
*இல்லறம் இல்லை; ஆனால்*
*ஏற்காத அறமே இல்லை!*
*கல்லையும் பணியச் செய்யும்*
*கனிவுறும் அறத்தில் மிக்க*
*வல்லவன் பசும்பொன் நாதன்*
*வளர்புகழ் வளர்க மாதோ!”*

பதிவு: சகோதரர் மருதுபாண்டியன் இரா.


# துணிச்சலாகச் செயல்பட்ட எஸ்எஸ்ஐ சம்பந்தம்

## பாராட்டிய தஞ்சை SP ஏ.சுந்தரவதனம் IPS

தஞ்சாவூர் கீழ ராஜ வீதியில் பட்டாக்கத்தியுடன் மோதலில் ஈடுபட்ட இருவரை, தனது உயிரையும் பொருட் படுத்தாமல் தடுத்து நிறுத்தி கைது செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் சம்பந்தம் அவர்களின் வீரத்தைப் பாராட்டி, SP ஏ.சுந்தர வதனம் IPS அவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அருகே கீழ ராஜ வீதியில், இரு இளைஞர்கள் கத்தியுடன் தகராறு செய்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு பணியில் இருந்த எஸ்.எஸ்.ஐ சம்பந்தம் தனி ஆளாகச் செயல்பட்டு கத்தியைப் பறிமுதல் செய்தார். இதைத்தொடர்ந்து, இந்த விரைவான நடவடிக் கையைப் பாராட்டி SP பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார். கடமை உணர்வோடு செயல்பட்ட நம் காவல்துறை அதிகாரிக்கு வாழ்த்துகளைப் பகிர்வோம்..!




நிருபர்: B.சத்தியராஜ், தஞ்சாவூர்.



# லஞ்சம் வாங்கினாலும், கொடுத்தாலும் மரண தண்டனை விதித்த மன்னன்

## 700 ஆண்டுகளுக்கு முந்தைய கல்வெட்டில் தகவல்

தமிழகத்தில் மன்னர்கள் ஆட்சி காலத்தில் லஞ்சம் கொடுத்தாலும், வாங்கினாலும் மற்றும் அதைத் தடுக்கத் தவறிய அரசு அதிகாரிக்கும் மரண தண்டனை வழங்க மன்னன் ஆணை பிறப்பித்த கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் அருகே உள்ளது பென்னேஸ்வரமடம் கிராமம். இங்குள்ள பென்னேஸ்வரர் கோயில் மிகவும் பழமையானது, பிரசித்தி பெற்றது. இந்தக் கோயில் கல்வெட்டில் லஞ்சம் வாங்கினாலும், கொடுத்தாலும் மற்றும் அதை தடுக்கத் தவறிய அதிகாரிகளுக்கும் மரண தண்டனை விதிக்கும் வகையில் மன்னன் ஆணையிட்ட கல்வெட்டு உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 7 நிலைகளைக் கொண்ட பெரிய ராஜகோபுரம் இருக்கும் கோயில்பென்னேஸ்வர மடம் கோயிலாகும். இது பிற்காலச் சோழர் காலக் கோயிலாகும். சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமையான இக்கோயிலில் ஏராளமான கல்வெட்டுகள் உள்ளன. சோழர்கள், போசாளர்கள் மற்றும் விஜயநகரப் பேரரசுகளின் ஆட்சியில் இக்கோயிலுக்கு பலவிதமான கொடைகள், தானங்கள் வழங்கப்பட்டதாக கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தானமாகப் பெறப் பட்ட நிலங்கள், ஊர்கள் மற்றும் பொது சொத்துகளை சிலர் ஏய்த்துஅனுபவித்துள்ளனர். இதனை அறிந்த பேரரசன் வீர ராமநாதன் ஒரு ஆணையை வெளியிட்டுள்ளார். அந்த ஆணை தொடர்பான கல்வெட்டு தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**போசாள மன்னன் வீர ராமநாதன் கல்வெட்டு**

“ஸ்ரீ வீரராமந்நாத தேவரீஸர்க்கு யாண்டு நாற்பத்தொன்றாவது உடையார் பெண்ணை



# விளம்பர கட்டண விபரம்

| | |
|---|---|
| கலர் பின் அட்டை முழு பக்கம் | - ரூ.20,000 |
| கலர் பின் அட்டை உள் பக்கம் | - ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் முழு பக்கம் | - ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் அரை பக்கம் | - ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே முழு பக்கம் | - ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே அரை பக்கம் | - ரூ.6,000 |

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில்,
மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. ✆ 9789491438


யாண்டார் மடத்திலும் பெண்ணை நாயனார் தேவதானமான ஊர்களிலும் ஒரு அதிகாரி யாதல் கணக்கர் காரியஞ் செய்வார்களாதல் கூசராதல் ஆரேனுமொருவர் வந்து விட்டது விடாமல் சோறு வேண்டுதல் மற்றேதேனும் நலிவுகள் செய் குதல் செய்தாருண்டாகில் தாங்களே அவர்களைத் தலையை அறுத்துவிடவும் அப்படி செய்திலர் களாதல் தங்கள் தலைகளோடே போமென்னும் படிறெயப்புத்த பண்ணி இதுவே சாதனமாகக் கொண்டு ஆங்கு வந்து நலிந்தவர் களைத் தாங்களே ஆஞ்ஞை பண்ணிக் கொள்ளவும்.

சீ காரியமாகத்தாங்க... த... போதும் போன அமுதுபடிக் குடலாக ஸர்வ மானியமாகக் குடுத்தோம். அனைத் தாயமு விட்டுக்கு... கூசர் உள்ளிட்டோர் பையூரிலே இருக்கவும் சொன்னோம். இப்படியாதே இதுக்கு விலங்கனம் பன்னினவன் கெங்கைக் கரையில் குராற் பசுவைக் கொன்றான் பாவத்தைக் கொள்வான்" என எழுதப்பட்டுள்ளது.

**இதன் விளக்கம்**

லஞ்சம் வாங்கினால், கொடுத்தால் சிரச்சேதம் செய்ய அதாவது தலையை வெட்டும் படியும் அவ்வாறு நிகழாமல் தடுக்கத் தவறினால் அதற்குப் பொறுப்பான அதிகாரி களின் தலையை வெட்டும்படியும் ஆணை வெளியிட்டுள்ளார். இக்கல்வெட்டு கோயிலின் தெற்கு சுவர் பகுதியில் இருக்கிறது. இக்கல் வெட்டு கிரந்தம் மற்றும் தமிழில் வடிக்கப் பட்டுள்ளது.

லஞ்சமாக உணவு அல்லது சோறு கேட்டால் கூட குற்றம் என்றும் அரசர் சொல்லியிருக்கிறார்.மேற்கண்ட பேரரசர் வீரராமநாதனின் கல்வெட்டைக் கொண்டும், தலைபலிக் கற்களின் சிற்ப அமைப்பைக் கொண்டும் இவ்வாறு தண்டிக்கப் பட்டிருக்கக் கூடும் என்பது தெரிகிறது. இது தமிழக வரலாற்றில் மிக முக்கியமானதாகும்.

இந்தக் கல்வெட்டை போசாளப் பேரரசன் வீரராமநாதனின் நாற்பத்தி ஒன்றாவது ஆட்சியாண்டில் இந்த உத்தரவுப் பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. கல்வெட்டு வெட்டப்பட்ட ஆண்டு கி.பி. 1295 என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் 2 ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பு, பொதுமக்களின் நலனுக்காக அல்லது அரசனின் நலனுக்காக பக்தியில் கொற்றவை என்னும் காளிக்குப் படையலாகவும் தங்கள் தலையைத் தாங்களே அறுத்து பலி கொடுக்கும் வழக்கம் இருந்துள்ளது.

இதில் நவகண்டம் என்பது, உடலில் ஒன்பது இடங்களில் வெட்டிக்கடைசியாக தன் தலையை அறுத்துக் கொள்வது. அரிகண்டம் என்பது ஒரே வெட்டில் சிரத்தை அறுத்து சமர்ப்பிப்பது. இது தொடர்பான கல்வெட்டுகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகம் உள்ளன.

அதுவும் போசாளர்களின் தலை நகரான ஹளேகுந்தாணியிலும், பையூர் நிலையுடையான் மதுராந்த கன் வீரநுளம்பன் ஆட்சி செய்த பென்னேஸ்வர மடத்திலும்தான் இருக்கின்றன. தலைபலிக் கற்களை நவகண்டம் அல்லது அரிகண்டம் என்றுதான்நினைத்திருந்தனர். இந்த தலைபலி கற்களையும் கோயில் கல்வெட்டுகளையும் ஆராய்ந்த கிருஷ்ணகிரி மாவட்ட வரலாற்று மையத்தைச் சேர்ந்த ஆய்வாளர் சுகவன முருகன், லஞ்சம் வாங்கிய ஒரு அதிகாரியின் உயிர்பலி கல்வெட்டு என்பதை கண்டறிந்துள்ளார்.




# கன்னியாகுமரி SP R.ஸ்டாலின் IPS தொடங்கிய 'நிமிர்' திட்டசாதனைகள்...

கடந்த ஆண்டு மே மாதம் 25–ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் R.ஸ்டாலின் IPS அவர்களால் குழந்தைகளை போக்சோ குற்றங்களில் இருந்து பாதுகாக்கும் "நிமிர் (The Rising Team)" என்ற திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டது.

நிமிர் நடவடிக்கையை தீவிரப்படுத்தும் வகையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

சமூக வலைதளங்கள் மூலமாக பழகி குழந்தைகள் ஏமாறுவதை தடுக்க தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்துதல். ஏற்கனவே குழந்தைகள் பாதிக்கப்பட்ட வழக்குகள் பற்றியும், அதில் குற்றவாளிகள் பயன்படுத்திய வழிமுறைகளையும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல். ஆண், பெண் குழந்தைகள் இருபாலருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

டியூஷன் மற்றும் கோடைகால சிறப்பு வகுப்புகள் செல்லும் குழந்தைகளை கண்காணித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

போக்சோ குற்றங்கள் இல்லாத கன்னியாகுமரி மாவட்டத்தை உருவாக்குதல் என பல்வேறு அறிவுறுத்தல்களை மாவட்ட SP R.ஸ்டாலின் IPS அவர்களால் வழங்கினார்.

கூட்டத்தில் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலசுப்ரமணியன் மற்றும் அனைத்து உட்கோட்ட நிமிர் குழுவை சேர்ந்த பெண் போலீஸார் கலந்துகொண்டனர்.

**தலைமை நிருபர்: J.ஜெயவேல்முருகன், நாகர்கோவில்.**



**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே யொழிய விடல். (113)**

விளக்கம்: நன்மையே தருவதாக இருந்தாலும் நீதியை விட்டு விலகுவதால் வரும் லாபத்தை, அப்பொழுதே விட்டு விடுக.



போலீஸ் பார்வை

Subscription

ஆண்டு சந்தா

ரூ.200/- மட்டுமே


## பெற்றோர்கள் கவனம்...





கோடை விடுமுறை காலங்களில் குளம், ஆறு, கிணறு போன்ற நீர் நிலைகளில் குழந்தைகளை தனியாக விளையாடவோ அல்லது குளிக்கவோ அனுமதிப்பதில் பெற்றோர்கள் கவனமாக இருக்க வேண்டும். இது போன்ற நீர் நிலைகளில் நீச்சல் தெரியாமல் குளிப்பதால் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. எனவே பெற்றோர்கள் எப்போதும் குழந்தைகளை கவனித்து அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

## பிராண முத்திரை

(சம்மணமிட்டு இரு கைகளாலும் செய்க)



உடல் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறலாம். ஆண்களுக்கு விந்தணுக்கள் விருத்தி அடையும். கண்பார்வை கூர்மைபெறும். மூளை சுறுசுறுப்படையும். நோயெதிர்ப்பு சக்தி பெறலாம். பயணத்தின் போது சோர்வடையாமல் இருக்கலாம். சுண்டு விரல் மோதிர விரல் நுனியில் கட்டை விரல் நுனியுடன் இணைத்து ஆள்காட்டி விரல், பாம்பு விரல் நீட்டியிருக்கும்படி இந்த பிராண முத்திரை செய்ய வேண்டும். தினமும் 10 நிமிடம் செய்ய வேண்டும். நல்ல பலன் தரும்.




# புற்று நோயை முற்றிலும் அழிக்க, வராமல் தடுக்க ஒரு சிறந்த மருந்து

## மிக கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் கூட குணமடைந்துள்ளனர்

புற்று நோய் வந்து விட்டது என்றாலே சகல சப்த நாடிகளும் ஒடுங்கிப்போய் தளர்ந்து விடுவார்கள். அருகில் இருந்து பார்த்தவர்களுக்குத் தான் தெரியும் , சிங்கம் போலே சிலுப்பிக் கொண்டு இருந்த பலரை , வேரோடு சாய்த்து விடும் தன்மை. இந்த புற்று நோய்க்கு உண்டு.

இப்போது ஓரளவுக்கு மருத்துவ உலகம் சில மருந்துகளை கண்டுபிடித்து, குணப்படுத்த நடவடிக்கை எடுத்தாலும், பணம் இருப்பவர்கள் மட்டுமே அந்த சிகிச்சை மேற்கொள்ள முடியும். ஆனால் அந்த வேதனை, ரணம் உயிரை விட்டு விடுவதே மேல் என்றே தோன்றி விடும்.

எனக்கு தெரிந்து, மிக நெருக்கமான வட்டத்தில் - 3 பேரை, அவர்கள் ஒட்டு மொத்த சொத்தையும் செலவழித்துப் பார்த்தும், உயிரையே காவு வாங்கி விட்டது.

அதை விட கொடூரமாக வேறு எந்த நோயின் வீரியத்தையும் கண் முன்னே நான் பார்த்ததில்லை. அப்படிப்பட்ட புற்று நோயை , படிப்படியாக முற்றிலும் குணப்படுத்த ஒரு எளிய வைத்தியம் இது.

இந்த சிகிச்சையை கண்டுபிடித்தவர் பிரேசில் நாட்டில் பிறந்தவரும் சிறந்த மருத்துவரும் பாதிரியாருமாகிய Fr ரோமனோ சகோ (Fr Romano Zago) என்பவர்.

இவர் கண்டு பிடித்த இம்மருந்தை புற்று நோயால் மிக கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் கூட உபயோகித்து குணமடைந்துள்ளனர்.

இனி இம்மருந்தை எப்படி தயாரிப்பது என்பதை பார்ப்போம். இதில் பயன் படுத்தப்படும் மூலிகை எங்கும் எளிதாக கிடைக்கும் சோற்று கற்றாழை ஆகும்.

### பொருட்கள்

சோற்று கற்றாழை 400 கிராம்
சுத்தமான தேன் 500 கிராம்
whisky(or)brandy 50 மில்லி (மருந்தாக மட்டும் பயன்படுத்துக)

### தயாரிப்பு முறை

சோற்றுக் கற்றாழையை எடுத்து பக்கவாட்டில் உள்ள முட்களை நீக்கி கொள்ள வேண்டும்.தோலை நீக்கிவிடக்கூடாது. தோலை சுத்தமான துணியினால் துடைத்துக் கொள்ளவேண்டும் அடுத்த படியாக எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறியதாக கற்றாழையை நறுக்கிக் கொள்ளவேண்டும்.

நறுக்கப்பட்ட துண்டுகளை ஒரு பாத்திரத்தில் கொட்டி தேன் மற்றும் whisky (or) brandy யுடன் சேர்த்து ஒரு கரண்டியால் நன்றாக கலக்க வேண்டும். இப்போது மருந்து தயாராகி விட்டது.

**மருந்தை உட்கொள்ளும் விதம்**

இம்மருந்தை தினமும் மூன்று வேளை உணவு அருந்துவதற்கு 30 நிமிடத்திற்கு முன்பு 15 ml வீதம் உண்ணவேண்டும் .ஒவ்வொரு முறை பயன்படுத்தும் போதும் மருந்தை நன்றாக குலுக்கிக் கொள்ளவேண்டும.

மேலே சொன்ன அளவில் செய்தால் பத்து நாட்களுக்கு இந்த மருந்து வரும். மருந்து தீர்ந்தவுடன் 10 நாள் கழித்து மீண்டும் தயாரித்து உண்ணவேண்டும.

பத்து நாட்களுக்கு மேல் மருந்தை storage செய்ய கூடாது.

இடையிடையே மருத்துவ பரிசோதனை செய்து கொண்டு நோய் நன்கு குணமாகும் வரை மருந்தை உட்கொள்ளவேண்டும். சிலருக்கு மிக குறுகிய காலத்திலேயே இதன் மூலம் நிவாரணம் கிடைத்துள்ளது. இது மிகவும் எளிதான சக்தி மிகுந்த மருந்து ஆகும்.

மருந்தை குளிர்சாதன பெட்டியிலோ அல்லது அதிக வெப்பம் இல்லாத இடங்களிலோ காற்று புகாத பாட்டிலில் வைத்திருப்பது நல்லது.

உங்களால் முடிந்தவரை உங்கள் நட்பு வட்டாரத்தில் இதை தெரியப்படுத்துங்கள். யாரோ ஒருவருக்கு இது மிக தேவையானதாக இருக்க கூடும்.

சிகரெட் பிடிக்கும் அனைவரும் உடனடியாக புகை பழக்கத்தை நிறுத்தி, இந்த மருந்தை உட்கொள்ள ஆரம்பித்தல் நல்லது.

ஒரே ஒரு நிமிஷம், உங்களுக்கு புற்று நோய் வந்துடுச்சுனு டாக்டர் சொல்றதா நினைச்சுக்கோங்க.. கண் முன்னாலே உங்க மனைவி, குழந்தைகள், வயசான அப்பா, அம்மா எல்லோரும், நீங்க இல்லாம கஷ்டப்படப் போறதை நினைச்சுப் பாருங்க.

அந்த கருமத்தை , இதுக்கு மேலே தொடுவீங்க..!

நாம மனசு வைச்ச எல்லாம் முடியும் சார்.

# காவல் நிலைய ஆய்வாளர் திரு.ராஜ்குமார் அவர்களுக்கு

# நன்றி தெரிவித்த காவல் ஆளுநர்கள்



திருப்பூர் மாநகரம் வீரபாண்டி காவல் நிலைய ஆய்வாளர் திரு.ராஜ்குமார் அவர்கள் தேர்தல் பணி முடித்த காவல் ஆளுநர்களுக்கு பாராட்டுக்கள் மற்றும் எங்களின் குடும்பத்தில் ஒருவராக இருந்து, காவல் ஆளுநர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யும் அதிகாரியாக பேசியிருந்த ஆடியோ வீரபாண்டி காவல் நிலையத்தில் பணிபுரியும் காவல் ஆளுநர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தையும் மனநிறைவையும் கொடுத்தது.

எந்தவிதமான கஷ்டமான பணி செய்யும் சூழ்நிலைகளிலும் இந்த மாதிரி அதிகாரிகளிடம் வேலை செய்யும் போது மிகவும் சந்தோஷ மாக உள்ளது என ஆய்வாளர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**தலைமை நிருபர்:A.மாரிராஜா, திருப்பூர்.**




# சிறுவர்கள் வாகனம் ஓட்டுவது ஆபத்து

இன்றைய காலக்கட்டத்தில், பள்ளி மாணவர்கள் மற்றும் 18 வயது பூர்த்தியடையாத சிறுவர்கள் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களைச் சாலைகளில் ஓட்டிச் செல்வதைக் காண்கிறோம். இது சட்டப்படி குற்றம் மட்டுமல்லாமல், பொதுமக்களின் உயிருக்கும் அச்சுறுத்தலாக அமைகிறது.

**தற்போதைய ஆபத்தான நிலை:**

* சிறுவர்கள் அதிவேகமாக வாகனங்களை ஓட்டுவது.
* இருசக்கர வாகனங்களில் இருவர் அல்லது மூவர் அமர்ந்து கொண்டு சாகசங்களில் ஈடுபடுவது.
* சாலை விதிகளைப் பற்றிய புரிதல் இல்லாமல் கவனக்குறைவாகச் செல்வது.

**சட்டப்படி தண்டனை (மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 199A):**

சிறுவர்கள் வாகனம் ஓட்டிப் பிடிபட்டால், அந்தச் சிறுவனின் பெற்றோர் அல்லது வாகனத்தின் உரிமையாளர் மீதே கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்:

1. பெற்றோருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.25,000 அபராதம் விதிக்கப்படலாம்.
2. அந்த வாகனத்தின் பதிவு (RC) 12 மாதங்களுக்கு ரத்து செய்யப்படும்.
3. சம்பந்தப்பட்ட சிறுவன் 25 வயது வரை ஓட்டுநர் உரிமம் பெற முடியாது.

**சமூகத்திற்கான வேண்டுகோள்:**

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகள் மீது காட்டும் அதீத பாசம், அவர்களுக்குப் பாதுகாப்பானது அல்ல. ஒரு நொடி கவனக்குறைவு, பல குடும்பங்களின் வாழ்வைச் சிதைத்துவிடும். உங்கள் பிள்ளைகள் கையில் சாவியைக் கொடுப்பது, அவர்களின் உயிரைப் பணயம் வைப்பதற்குச் சமம்.

**பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்**

உங்கள் பகுதியில் சிறுவர்கள் ஆபத்தான முறையில் வாகனம் ஓட்டுவதைக் கண்டால், உடனடியாக அதைப் புகைப்படம் அல்லது வீடியோ எடுத்துவலைதளங்களில் பதிவிடுங்கள்.
District Collector Kancheepuram (காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்)
Kanchipuram District Police (காஞ்சிபுரம் காவல் துறை) Tamil Nadu Police (தமிழ்நாடு காவல் துறை)

**அதிகாரிகளுக்கு விண்ணப்பம்**

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் மற்றும் போக்குவரத்து காவல் துறையினர், சிறுவர்கள் வாகனம் ஓட்டும் செயலைக் கட்டுப்படுத்தச் சாலைகளில் தீவிரக் கண்காணிப்பு மற்றும் சோதனைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்களாகிய நாங்கள் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

விபத்தில்லா தமிழகத்தை உருவாக்குவோம் – சட்டத்தை மதிப்போம்!

சிறப்பு நிருபர்: ம.சசி, காஞ்சிபுரம்.

# கைவிரல் ரேகை பதிவு செய்வதில் புதிய தொழில்நுட்பம் பற்றி பயிற்சி

மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களின் நிலைய எழுத்தர்கள் மற்றும் கணினி பதிவு செய்யும் காவல் ஆளிநர்களுக்கு இன்று 29.04.24-ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் அலுவலகத்தில் கைவிரல் ரேகை உதவி ஆய்வாளர்களால் கைவிரல் ரேகை பதிவு செய்வதில் புதிய தொழில்நுட்பம் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் போது துணை காவல் கண்காணிப்பாளர், மாவட்ட குற்றப் பதிவேடுகள் கூடம், ஆய்வாளர் தொழில் நுட்பப்பிரிவு ஆகியோர் உடன் இருந்தனர்.

நிருபர்: B.சத்தியராஜ், தஞ்சாவூர்.



## 69-ஆவது அகில இந்திய காவல் திறனாய்வு போட்டியில் வென்றவர்களுக்கு

# மதுரை SP திரு.அர்விந்த் IPS அவர்கள் பாராட்டு

மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரில் கடந்த 29.03.2026-ம் தேதி முதல் 03.04.2026-ம் தேதி வரை நடைபெற்ற 69-ஆவது அகில இந்திய காவல் திறனாய்வு போட்டியில் குற்ற புலனாய்வில் அறிவியல் உதவிகள் பிரிவில் (Scientific Aids to Investigation), தமிழக காவல்துறை சார்பில் கலந்து கொண்ட குழுவில் மதுரை மாவட்டம், சமயநல்லூர் உட்கோட்டம், அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.M.அர்ச்சுனன் அவர்கள் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் பெற்றுள்ளார். 69-ஆவது அகில இந்திய காவல் திறனாய்வு போட்டியில் குற்ற புலனாய்வில் அறிவியல் உதவிகள் (SAI) பிரிவில் தங்கப்பதக்கம் பெற்று வந்த சார்பு ஆய்வாளர் திரு.M.அர்ச்சுனன் அவர்களை மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் திரு.அர்விந்த் IPS அவர்கள் வெகுவாக பாராட்டினார்கள்.

சிறப்பு நிருபர்:J.பீமராஜ், மதுரை.



# மண்ணிற்குப் பெருமை சேர்த்த மாணவிக்கு மனமார்ந்த வாழ்த்துகள்!



12–ம் பொதுத்தேர்வில், குன்னம் தொகுதி செந்துறை ஒன்றியம், தெத்தேரி கிராமத்தைச் சேர்ந்த மாணவி செல்வி ரிக்சிதா 600–க்கு 598 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் முதலிடம் பிடித்து மாபெரும் சாதனை படைத்துள்ளார். அரியலூர் மாவட்டத்திற்கே பெருமை சேர்த்துள்ள இந்தச் சாதனை மகளுக்கும், உறுதுணையாக இருந்த ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

அதேபோல, இந்தப் பொதுத்தேர்வில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்றுள்ள தமிழ்நாட்டின் மாணவ, மாணவியர் அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் பயணம் மென்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.



# மயிலாடுதுறையில் 8 கிலோ கஞ்சா பறிமுதல்

மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கடந்த 6–ம் தேதி அன்று கிடைத்த ரகசிய தகவலின் பேரில் திரு.லாமெக், மயிலாடுதுறை மதுவிலக்கு பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தலைமையில் திரு.அறிவழகன், உதவி ஆய்வாளர், தனிப்படை மற்றும் காவலர்கள் மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையத்தில் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது, 4 கிலோ கஞ்சா போதை பொருளை எடுத்து வந்த கரைக்குடி வள்ளுவர் நகரைச் சேர்ந்த கோவிந்தராஜன் மகன் சீனிவாசன்(46) என்பவரை கைது செய்தனர்.

மேலும், அவரிடம் விசாரணை மேற்கொண்டதில், இதில் தொடர்புடைய 4 நபர்களை கைது செய்து அவர்களிடமிருந்து மேலும் 4 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.

குற்றவாளிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் கஞ்சா மற்றும் போதைப்பொருள் விற்பனை, கடத்துதல், வைத்திருத்தல் தொடர்பாக ஏதேனும் தகவல் இருந்தால் பொதுமக்கள் 8438456100 என்ற அலைபேசி எண்ணிற்கு தகவல் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நிருபர்: S.விக்னேஷ், கும்பகோணம்.




திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகரத்தினம் IPS அவர்களின் உத்தரவின்படி மாவட்டம் முழுவதும் நடத்தப்பட்ட தீவிர சோதனையில் இனாம்குளத்தூர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட அம்மாபேட்டை பகுதியில் விற்பனைக்காக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை பதுக்கி வைத்திருந்த இருவரை தனிப்படையினர் கைது செய்தனர். மேலும், அவர்களிடமிருந்து விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்த 306 கிலோ தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

**நிருபர்: B.ஸ்ரீனிவாசன், திருச்சி.**





**செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:**

**editorpoliceparvai@gmail.com**

**செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438**

# தமிழகத்தில் 200 யூனிட் இலவச மின்சாரம்: புதிய அரசாணை வெளியீடு!

## 500 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்துவோருக்கு என்ன நிலை?




தமிழகத்தில் வீட்டு உபயோக மின் நுகர்வோருக்கான இலவச மின்சாரச் சலுகையை விரிவுபடுத்தி தமிழக அரசு அதிகாரப்பூர்வ அரசாணையை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் லட்சக்கணக்கான குடும்பங்கள் பயனடையவுள்ளனர்.

**அரசாணையின் முக்கிய அம்சங்கள்**

தமிழக முதல்வர் சி.ஜோசப் விஜய் அவர்கள் சமீபத்தில் அறிவித்த 200 யூனிட் இலவச மின்சாரம் தொடர்பான விரிவான வழிகாட்டுதல்களை மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை வெளியிட்டுள்ளது. அந்த அரசாணையில் கூறப்பட்டுள்ளதாவது:

**200 யூனிட் இலவசம்**

தகுதியுள்ள அனைத்து வீட்டு உபயோக மின் நுகர்வோருக்கும் இனி இரு மாதங்களுக்கு ஒருமுறை 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கப்படும்.

**யாருக்குப் பொருந்தும்?**

இரு மாதங்களுக்கு ஒருமுறை தங்களது மின் பயன்பாட்டை 500 யூனிட்டுகளுக்குள் வைத்திருக்கும் சாமானிய மக்களுக்கு இந்த 200 யூனிட் இலவச மின்சாரச் சலுகை பொருந்தும்.

**அரசு ஏற்கும் சுமை**

இந்த கூடுதல் சலுகைக்காக அரசுக்கு ஆண்டுக்கு சுமார் ரூ. 1,730 கோடி கூடுதல் செலவாகும். பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்விலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக இந்த நிதியை அரசே ஏற்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**500 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்துவோர்..**

பலரது எதிர்பார்ப்பாக இருந்த "500 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்துவோருக்கான சலுகை" குறித்தும் இந்த அரசாணையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது:

"இரு மாதங்களுக்கு ஒருமுறை 500 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் நுகர்வோரைப் பொறுத்தவரை, தற்போது நடைமுறையில் உள்ள 100 யூனிட் இலவச மின்சாரம் வழங்கும் திட்டமே தொடரும். அவர்களது கட்டணக் கட்டமைப்பில் எந்த மாற்றமும் இன்றி பழைய முறையே அமலில் இருக்கும்."

அதாவது, உங்கள் மின் பயன்பாடு 500 யூனிட்டைத் தாண்டும் பட்சத்தில், முதல் 100 யூனிட்டுகள் மட்டுமே இலவசமாகக் கணக்கிடப்படும். 500–க்குள் இருந்தால் மட்டுமே 200 யூனிட் இலவசம் என்ற சலுகையைப் பெற முடியும்.

**இந்த அறிவிப்பின் நோக்கம் என்ன?**

தமிழக அரசு இந்த அதிரடி மாற்றத்தைக் கொண்டு வந்ததற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளது..

**பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல்**

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள சாமானிய மக்களின் நிதிச் சுமையைக் குறைத்தல்.

**நிதி நெருக்கடிக்குத் தீர்வு**

நடுத்தர மற்றும் ஏழை எளிய குடும்பங்களின் மாதாந்திரச் செலவில் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதன் மூலம் அவர்களுக்குப் பொருளாதார நிம்மதி அளித்தல். தமிழக அரசின் இந்த அறிவிப்பு, கோடைக் கால மின் பயன்பாடு அதிகரித்துள்ள சூழலில் பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது




### நாற்பத்தி எட்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள

# பொதுமக்கள் தவறவிட்ட 320 செல்போன்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைப்பு

கடந்த வருடம் மட்டும் சுமார் 2 கோடி மதிப்புள்ள 1265 செல்போன்கள் கண்டுபிடிடிக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களில் செல்போன் தொலைந்து போனதாக பல்வேறு மனுக்கள் பெறப்பட்டது. அந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.R.ஸ்டாலின் IPS அவர்கள் உத்தரவிட்டார்கள்.

உத்தரவின்படி சைபர் பிரிவு போலீசார் காணாமல் போன செல்போன்களை கண்டுபிடித்து மீட்கும் பணியில் தொடர்ந்து தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். தொடர் நடவடிக்கையால் தற்போது சுமார் 48,00,000 (நாற்பத்தி எட்டு இலட்சம் ரூபாய்) மதிப்புள்ள 320 செல்போன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேற்படி கண்டுபிடிக்கப்பட்ட செல்போன்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உரிய நபர்களிடம் இன்று ஒப்படைத்தார்.

இந்த செல்போன்களை கண்டுபிடிக்க காரணமான சைபர் பிரிவு போலீசாரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வெகுவாக பாராட்டினார்கள். மேலும் செல்போன் காணாமல் போனதாக பெறப்பட்ட மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**குறிப்பு**

பொதுமக்கள் தங்களுடைய செல்போன் தொலைந்து போனால் அருகிலுள்ள காவல் நிலையத்தில் உடனடியாக மனு அளிக்கவேண்டும் அல்லது Tamilnadu Police Citizen Portal (https://eservices.tnpolice.gov.in) என்ற காவல் துறை இணையதளத்திலும் தங்களது புகாரை பதிவு செய்யலாம். CEIR Portal (https://www.ceir.gov.in/) என்ற இணையதளத்தில் தொலைந்த செல்போனை Block செய்ய முடியும்.

**தலைமை நிருபர்: J.ஜெயவேல்முருகன், நாகர்கோவில்.**



### கொலைவழக்கில் குற்றவாளிகளை 48 மணி நேரத்தில் கைது செய்த

# கரூர் மாவட்டம் காவல் துறையினருக்கு SP திரு.D.N.ஹரி கிரண் பிரசாத் IPS பாராட்டு

கரூர் மாவட்ட காவல்துறையினர் 48 மணி நேரத்திற்குள் கொலைவழக்கில் குற்றவாளிகளை அடையாளம் கண்டு கைது செய்த காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளினர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் நேரில் அழைத்து பாராட்டு சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கினார்.

கரூர் மாவட்டம், கரூர் நகர உட்கோட்டம், வெள்ளியணை காவல் நிலைய குற்ற எண் 122/26 u/s 127(2), 103(1), 305 BNS ஆதாயக் கொலையுண்ட வழக்கில் எதிரிகளை விரைவாக கண்டறிந்து பிடிப்பதற்கு மூன்று தனிப்படைகள் அமைக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு அருகிலும், சுற்றுவட்டார பகுதிகளிலும் பல்வேறு CCTV கேமிராக்களை ஆய்வு செய்தும், சமீபத்தில் சிறையில் இருந்து வெளிவந்த குற்றவாளி களையும், சந்தேக நபர்களையும் விசாரணை செய்யப்பட்டது.

மேலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று மேற்குறிப்பட்ட வழக்கில் தொடர்புடைய 1) பார்த்தீபன், வயது 24, த/பெ சுப்பையா, திருநெல்வேலி மாவட்டம், 2) பாண்டீஸ்வரன் (எ) பாண்டி, வயது 19, த/பெ மனோகரன், மதுரை, 3) வனிதா, வயது 23, த/பெ சண்முகம், கரூர் மாவட்டம் 4) கொம்பையா, 24/26, த.ஃபெ.முருகன், திருநெல்வேலி. 5) சதீஸ்குமார், 26/26, த/பெ. சுப்பையா, திருநெல்வேலி. ஆகியோர்களை குற்றம் நடந்த 48 மணி நேரத்திற்குள் அடையாளம் கண்டறியப்பட்டது.

மேற்கூறிப்பிடப்பட்ட வழக்கில் சிறப்பாக செயல்பட்ட காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளினர்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.D.N.ஹரி கிரண் பிரசாத், IPS அவர்கள் நேரில் அழைத்து வழக்கின் தன்மை மற்றும் குற்றவாளிகளின் நிலைகளை கேட்டறிந்து சிறப்பாக செயல்பட்டதற்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் வெகுமதி வழங்கினார்.

நிருபர்: N.நபி முகமது, கரூர்.



அன்பு இதயத்தில் இருக்கட்டும்..
அறிவு செயலில் இருக்கட்டும்..
ஆணவம் காலடியில் இருக்கட்டும்..
நம்பிக்கை உன் மொத்த உருவமாக இருக்கட்டும்..
முடிவில் உன் பங்கு முழுமையாக இருக்கட்டும்..
வெற்றி உனதே..!

ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்

# "மாமூல் வாங்குபவர்கள் பிச்சை எடுத்து சாப்பிடலாம்"

## கடலூர் மாவட்ட SP ஜெயகுமார் IPS அவர்கள் ஓபன் மைக்கில் எச்சரிக்கை

லாட்டரி விற்பனை விவகாரத்தில் காவல் துறை அதிகாரிகளை, ஒபன் மைக்கில்,

"மாமூல் வாங்குபவர்கள் பிச்சை எடுத்து சாப்பிடலாம்" என, SP வெளுத்து வாங்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தை சேர்ந்த பிரபல லாட்டரி வியாபாரி நசீர், 56, அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுகளை விற்பனை செய்தார். இதற்கு போலீசார் உடந்தையாக இருந்ததாக வடக்கு மண்டல ஐ.ஜி., அஸ்ராகார்க் வரை புகார் சென்றது.

தொடர்ந்து, கடலூர் SP ஜெயகுமார் IPS உத்தரவின்படி, தனிப் படை போலீசார் நசீரை பிடித்தனர். இதில், போலீஸ் அதிகாரிகள் முதல் கடைநிலை காவலர்கள் வரை பல லட்சம் ரூபாய் மாமூல் வழங்கியதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக, சிதம்பரம் DSP லாமேக், இன்ஸ்பெக்டர் ரமேஷ் பாபு உட்பட 7 பேர் வேலூர் மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில், கடலூர், பண்ருட்டி, சிதம்பரம், நெய்வேலி, விருத்தாசலம், சேத்தியாத்தோப்பு, திட்டக்குடி உள்ளிட்ட ஏழு உட்கோட்ட காவல் அதிகாரிகளையும் மைக்கில் அழைத்தார் SP ஜெயகுமார் IPS.

அப்போது அவர் பேசுகையில், 'சிதம்பரம் பகுதியில் காலம் காலமாக லாட்டரி விற்பனையில் போலீசார் மாமூல் வசூலித்து வந்தது தெரிகிறது. இதில் விதி விலக்காக ஒரு சில அதிகாரிகள் மட்டும் நேர்மையாக பணியாற்றி வருகின்றனர்.



இனியும் லாட்டரி விற்பனையாளர்களிடம் தொடர்பு கொள்ள நினைப்பவர்கள் கண்டிப்பாக, வேறு மாவட்டத்திற்கு இடம் மாற்றம் செய்யப்படுவர். 'லாட்டரி, கஞ்சா விற்பனைக்காக மாமூல் வாங்குபவர்கள், பிச்சை எடுத்து சாப்பிடலாம்' என, கடுமையாக எச்சரித்தார்.

போலீசாரை, எஸ்.பி., மைக்கில் இப்படி பேசியது, பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




# UDR பட்டா என்றால் என்ன?



UDR என்பது “Updating Registry Scheme” என்பதன் சுருக்கமாகும். இது 1984–1987 காலகட்டத்தில் தமிழக அரசு செயல்படுத்திய ஒரு திட்டமாகும்.

UDR பட்டா என்பது நில உரிமை பதிவுகளை மேம்படுத்தும் ஒரு செயல்முறை. இதன் மூலம், அப்போது நில உரிமை ஆதாரங்களின்றி இருந்த நபர்களுக்கு, நிலத்தின் உரிமைப்பட்டியல் (Revenue Records) புதுப்பிக்கப்பட்டு பட்டா வழங்கப்பட்டது.

**UDR பட்டா வழங்கப்பட்ட நிலங்கள்:**

பண்டைய கால நிலங்கள் (பொது பயன்பாட்டிற்காக இருந்த நிலங்கள் சில தனியாருக்கு வழங்கப்பட்டவை).

கட்டிடமற்ற நீண்டகால பயன்பாட்டு நிலங்கள்.

வழக்கமாக விவசாயம் செய்து வந்த விவசாயிகளுக்கு நில உரிமை உறுதி செய்தல்.

**UDR பட்டாவின் முக்கிய அம்சங்கள்:**

* அரசு ஆவணங்களில் பெயர் சேர்த்தல்
* நில உரிமை சான்று உறுதி செய்தல்
* விவசாயிகள் மற்றும் நில உரிமையாளர்களுக்கு பயனளிக்கிறது
* சட்டரீதியான நில உரிமை உறுதி

**UDR பட்டா தொடர்பாக நீங்கள் கவனிக்க வேண்டியவை:**

அனைத்து UDR பட்டாக்களும் சட்டப்படி வழங்கப்பட்டதல்ல. சில UDR பட்டாக்கள் சரியாக வெளியிடப்படாத காரணத்தால் வழக்குகள் நிலுவையில் உள்ளன. பட்டா நிலையை உறுதி செய்ய தாலுகா அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளலாம்.

RTI (தகவல் அறியும் உரிமை) மூலம் பட்டா நிலைபற்றி தகவல் பெறலாம்.

பட்டா சரியாக இல்லையென்றால், அதை மாற்றலாம் அல்லது உரிமைச் சான்றுகளை ஏற்படுத்தலாம்.

தகவல்:
சிறப்பு நிருபர்- குரு.சரவணன், திண்டுக்கல்.

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**


EMPIRE
Dailyfresh
Premium Herbal Powder
ANCIENT+ MODERN FORMULA
100% HERBAL
பைல்லம் உமி (இஷப்கோல்) | கடுக்காய்
நன்நுண்ணுயிரிகள் (PROBIOTICS) | சிவதை வேர்
DIETARY FIBER
PROBIOTICS
உடல் நச்சுக்களை வெளியேற்றுகிறது
மலச்சிக்கலை சரிசெய்கிறது
குடல்பகுதியை சுத்தப்படுத்துகிறது
குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது
செரிமான சக்தியை அதிகரிக்கிறது
கெட்ட கொழுப்பை குறைக்கிறது
உடல் எடையை கட்டுப்படுத்துகிறது
நல்ல பாக்டீரியாவை தருகிறது
இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்துகிறது
Dailyfresh
DETOX POWDER
30 SACHETS
Your Daily Gut & Detox Support
30 Sachets | MRP Rs.1800/-
EMPIRE
Dailywell
Premium Herbal Juice
100% HERBAL
42 HERBS & BERRY FRUITS
டிராகன் பழம் | எல்டர்பெரி
கோஜிபெரி | மங்குஸ்தான்
ஸ்ட்ராபெரி | ரேஸ்பெரி
பிளாக்கரண்ட் | அசாய் பெரி
மல்பெரி | சீபக்தார்ன்
இலந்தைப்பழம் | பிளாக்பரி
கிரான்பெரி | ப்ளூபெரி | மாதுளை
நுனாப் பழம் | பீட்ருட் | பேரீச்சை
நெல்லிக்காய் | திராட்சை விதை
இஞ்சி | துளசி | வீட்கிராஸ்
நெருஞ்சில் | சிலாசித்து
அஸ்வகந்தா | முருங்கை | ஓமம்
லவங்கப்பட்டை | மிளகு பெருங்காயம்
நிலவேம்பு | கீழாநெல்லி
மந்தாரைப்பூ | திப்பிலி | மஞ்சள்
அரத்தை | கடுகுரோகினி
லோத்திரப்பட்டை | அசோகப்பட்டை
மருதப்பட்டை | பிரிஞ்சி இலை
Dailywell HERBAL JUICE
42+ Herbal Ingredients
500 ml
உடல் செல்களின் புதுப்பிக்கும் வேகத்தை அதிகரிக்கிறது
உடல் செல்களை ஆக்ஸிடேசனிலிருந்து பாதுகாக்கிறது
உடலுக்கு அனைத்து ஊட்டச்சத்துக்களையும் அளிக்கிறது
அதிக அளவில் நோய் எதிர்ப்புசக்தியை தருகிறது
அனைத்துவிதமான ஒவ்வாமையிலிருந்து காக்கிறது
உடல் சக்தியை அதிகரிக்கிறது
இரத்தஓட்டத்தை அதிகரிக்கிறது.
இரத்தத்தை சுத்தப்படுத்துகிறது.
ஹார்மோன்களை சமநிலையில் வைக்கிறது
500ml | MRP Rs.1800/-
www.empirebizcorp.in
உங்கள் இல்லத்திலிருந்தே எங்களது தயாரிப்புகளை பெறலாம்.
97 89 49 1438 | 766 755 1542

Posted at - patrikachannel Egmore Date of publication Everymonth 1st week.
POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520


# அரவணைக்கும் அரண்மனை அறக்கட்டளை

அறமும் அன்பும் இரு கண்கள்

**ஆதரவற்ற குழந்தைகள், முதியோர்களுக்கு முற்றிலும் இலவச சேவை**

எண்.30/2, சஹாய மாதா கோவில் தெரு, மலையடிவாரம், பொன்மலை,
திருச்சி - 620004 ✆ 98948 90808




## AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU

Affiliated to :

## AEROSKATOBALL FEDERATION OF INDIA

No.30/2, Shagayamatha Kovil Street,
Malaiadivaram, Ponmalai, Trichy-4

FIT INDIA

Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846


4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO